உயர்கல்வித் (கே2) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

**கடித (நிலை) எண் 162, நாள். 22.08.2022.**

அனுப்புநர்
முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து பல்கலைக்கழக பதிவாளர்கள் / தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்கள்

ஐயா / அம்மையீர்,

பொருள் உயர் கல்வி – பல்கலைக்கழகங்கள் – அனைத்து வகை இளங்கலை பட்டப்படிப்புகளுக்கும் இரண்டாம் வருட பருவத் தேர்வில் தமிழ் மொழி பாடத்தினை சேர்த்தல் – குறித்து.

...... .... ......

உயர் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்துப் பல்கலைக்கழங்களில் (அண்ணா மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகங்கள் நீங்கலாக) இளங்கலை பட்டப்படிப்புகளுக்கு நடத்தப்பட்டு வரும் இரண்டாம் ஆண்டு பருவத் தேர்வுகளில் (2nd year Semester in all UG Courses) தமிழ் மொழி பாடத் திட்டம் சில பல்கலைக்கழகங்களில் நடத்தப்படுவதில்லை என அறியப்படுகிறது. இந்நிலையினை மாற்றி அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இளங்கலை பட்டப்படிப்புகளுக்கான இரண்டாம் ஆண்டு பருவத் தேர்வுகளிலும் இனி தமிழ் மொழி பாடத் திட்டத்தினை சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. அதற்கிணங்க, இளங்கலை பட்டப்படிப்புகளுக்கு நடத்தப்பட்டு வரும் இரண்டாம் ஆண்டு பருவத் தேர்வுகளிலும், இனி தமிழ் மொழி பாடத் திட்டத்தினை சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென உயர் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

22.8.22

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

22/8/22